29.01.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 240 /2015 ) திரு.எம்பெருமாள்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>

1) நான் இந்த வழக்கில் 5ம்பிரதிவாதி என்றால் சரிதான். 2ம்பிரதிவாதி சுப்பையா எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 2023 ஆம் ஆண்டு இறந்துபோனார். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 8 வது வரை படித்துள்ளேன். இந்த வழக்கின் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்துப்பார்த்துள்ளேன் என்றால் படித்துள்ளேன். வாதி தாக்கல் செய்த வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்கோரிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து விவரத்தில் 1 வது தபசிலாக சந்தை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 1 வது தபசிலாக காட்டப்பட்டுள்ள சொத்து நான் குடியிருக்கும் வீட்டிற்கு கீழ்புறம் அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம்பிரதிவாதியான நயினார் எனது குடும்பத்திற்கு நெருங்கிய உறவினர் என்றால் இல்லை. பேசி பழக்கம் உண்டா என்றால் பேச்சிவார்த்தை உண்டு அதிகமாக பேசமாட்டோம். இந்த வழக்கின் வாதியும் அவரின் உடன்பிறந்த சகோதரர் வடிவேலுக்கு எதிராக 1991 ஆம் ஆண்டு 1ம்பிரதிவாதி வழக்கு தொடர்ந்திருந்தார் என்றால் வழக்கு ஆவணங்களை படித்துப்பார்த்ததில் தெரியும். முந்திய வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பை இந்த வழக்கில் ஆவணமாக வாதி தாக்கல் செய்துள்ளார் அதை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்க்கவில்லை. எனது வீட்டின் முன்பு கிழமேல் தெரு என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கீழ்புறம் கோமதியின் வீடு என்றால் தவறு சர்க்கார் புறம்போக்கு அதற்கு கீழ்புறம் கோமதி வீடு உள்ளது. வாதி கோமதி கிரையம் பெற்ற பத்திரத்தினை வழக்கில் தாக்கல் செய்துள்ளார் அதை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்க்கவில்லை. 1ம்தபசில், கோமதி வீடு அளந்துபார்ப்பதற்காக நீதிமன்ற ஆணையர் மற்றும் வருவாய்துறை சர்வேயர் வந்திருந்தார் என்றால் சரிதான். அளந்து பார்த்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் தவறுதலாக கொடுத்துள்ளார்.

2) 1 வது தபசிலை காட்டக்கூடிய புகைபடத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம்தபசிலுக்கு மேல்புறம்உள்ள வீடு ஓட்டு வீடு என்றால் சரிதான் ஒரு பகுதி கட்டைகுத்தப்பட்டுள்ளது. கட்டகுத்தப்பட்ட வீடு தாவா 1ம்தபசிலின் வடக்கு பகுதி என்றால் ஒரு அறை ஓட்டு வீடும் மற்ற பகுதி கட்டக்குத்தப்பட்டுள்ளது. அந்த

வீட்டை எனது தாத்தா மலையாண்டிக்கோனாரும் எனது சித்தப்பா கிருஷ்ணக்கோனரும் எனது அப்பாவுக்கு கிரையமாக எழுதிக்கொடுத்த சொத்து என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
29.01.2026.